www.tamilarangam.net


# அறவழி
# NONVIOLENCE

வெளியீடு
அறவழிப்
போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண்: 2
சாவகச்சேரி

அறம் 1 மாதமொருமுறை ❋ 1986 ஆடி பக்கம் 10 ❋ விலை 1-50 வழி 3


# 'தமிழர் உரிமைகளுக்காக அறவழியில் போராடுபவர்''
## ''அறநெறிக்காவலர்'' பட்டமளிப்பு விழாவில்
## நேசையாவுக்கு துணைவேந்தர் 'வித்தி' — புகழாரம்

''தமிழருடைய வரலாற்றிலே கடந்த 26 ஆண்டு காலம் ஒரு சோதனைமிக்க காலமாகும். அக்காலப் பகுதியிலே தமிழ்த்தலைவர்கள் நடாத்திய போராட்டத்திலே அவர்களுக்கு உறுதியாக இருந்து அறவழியிலே தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்குப் பெரிதும் உழைந்தவர் பேராசிரியர் நேசையா. தம்முடைய வாழ்நாளிலே காந்தியக் கோட்பாட்டினைக் கடைப்பிடித்து அதன் வழி செயலிலே நடந்து வருபவர். எந்த வழியிலும் அறவழியையே கடைப்பிடிக்கவேண்டும் என்று வற்புறுத்துபவர்''.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு. வித்தியானந்தன் யாழ். பல்கலைக்கழக—கைலாசபதி அரங்கில், அறவழிப் போராட்டக்குழு நடாத்திய பேராசிரியர் கு. நேசையாவின் பட்டமளிப்பு விழாவின்போது ஆரம்பப் பேருரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

துணைவேந்தர் சு. வித்தியானந்தன் மேலும் அங்கு பேசுகையில், ''பேராசிரியர் நேசையா—தந்தை செல்வாவின் வலக்கரம்போல் அவர் வழி நின்று அவருடைய கொள்கைகளைப் பின்பற்றி தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெறவேண்டும் என்று இன்றும் வாதாடி வருபவர். அத்தகைய ஒரு பெருமகனை அறவழிப் போராட்டக்குழு, இன்று பாராட்டிப் பட்டமளித்து கௌரவிப்பது பாராட்டக்கூடிய செயல்'' என்று கூறினர்.

இவ்விழாவில் துணைவேந்தர் வித்தி பேராசிரியர் நேசையாவுக்கு ''அறநெறிக்காவலர்'' எனும் சிறப்புக் கௌரவப்பட்டத்தினை அளித்து கதராடை போர்த்தினர்.

இப்பட்டமளிப்பு விழாவில் பேராசிரியர் நந்தி (மருத்துவ பீடாதிபதி), வண. எஸ். சர்வானந்தா அடிகள், திருவாளர்கள் எஸ். வேலாயுதம் (அதிபர்), சி. வி. சிவஞானம் (ஆணையாளர்), வீ. என். சிவராசா (பதிவாளர்), பண்டிதர் செ. சிவலிங்கம் மில்வைற் க. சுனகராசா ஆகியோர் ஆசியுரை, வழங்கினர்.

மற்றும் திருவாளர்கள் என். பாலகிருஷ்ணன் (கலைப்பீடாதிபதி), எஸ். பரநிருபசிங்கம், கே. சண்முகலிங்கம் (சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளர்), திருமதி ஜீ. பரராசசிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர்) ஆகியோர் ஆசியுரைகள் நிகழ்த்தினர்.

அறவழிப் பாலகர்களின் கலைநிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ''அறநெறிக்காவலர்''

மகாத்மா காந்தியின் அறவழிக்கொள்கை வழி தமிழ் சமுதாயத்தின் மத்தியில் அரை நூற்றாண்டு காலமாக தன்னலமற்ற சேவையாற்றி தமிழ் மக்களுக்கு முன்னோடிப் புருடராக விளங்குகின்ற பேராசிரியர் குணசேகரம் நேசையா அவர்களின் உத்தம சேவையையும் அறவழி வாழ்வையும் கௌரவித்து அறவழிப் போராட்டக்குழு அவருக்கு ''அறநெறிக்காவலர்'' எனும் கௌரவ சிறப்புப் பட்டத்தினை, இம் மாதம் 19ம் திகதி, யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வழங்கியுள்ளது. (ஆ—ர்)

**முரண்பாடுகளைத் தவிர்த்து ஒற்றுமையைப் பேணுக**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிந்தனைக்கு:

# ஓர் இந்திய அன்பரின் மடலில் இருந்து.........

"இலங்கை வாழ் தமிழர்களுக்கு இன வெறியால் ஏற்பட்டுவரும் இன்னல்களைப்பற்றித் தமிழ் ஏடுகளில் செய்திகள் வந்து கொண்டுதானிருக்கின்றன. மனிதர்களை இனமாகவும், மதமாகவும், ஜாதியாகவும் பிரித்துப் பார்த்து வேற்றுமையை வளர்க்கும் குறுகிய பிற்போக்கு சக்திகள் ஆட்சியாளர்கள்மீது செல்வாக்கு செலுத்தும்போது அதன் விளைவு வேறெப்படி இருக்கமுடியும்?"

"வாளெடுத்தவன் வாளால் அழிவான்" என்று அன்பு நெறியை மனிதசமுதாயத்துக்கு போதித்து மறைந்த இயேசு பெருமானும். யாகமென்னும் பெயரில் உயிரினங்களை பலியிட்டு வதைக்கும் கொடுமையைச்சாடி கொல்லாப் பெரு நெறியை குவலயமெங்கும் பரப்பிய புத்தர்பெருமானும் தோன்றி **2000** ஆண்டுகளாயும்கூட மனிதன் விலங்கியல்பு மாறாமல் இருப்பது எவ்வளவு பரிதாபம்!

தனிமனிதர்கள் ஒருவரையொருவர் ஆயுதங்களால் தாக்கினால் அது தண்டனைக்குரிய குற்றம், அதே செயலைச் செய்ய அரசாங்கம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு பயிற்சி கொடுத்து ஊதியமும் கொடுத்து வருகிறதே இது எவ்வளவு பெரிய தண்டனைக் குற்றம். நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் யுத்த அரக்கனுக்கு எத்தனை ஆயிரம் உயிர்கள் பலியிடப்படுகின்றன! இந்தக் காட்டுமிராண்டித் தனத்தில் இருந்து மனித சமுதாயம் என்று மீட்சிபெறப் போகின்றது?

மனிதன் என்னதான் சந்திரமண்டலத்துக்குத் தாவிப்பறந்தாலும்— அறிவு நிலையில் அவன் இன்னும் குழந்தையாகத்தானே செயல்படுகிறான். இல்லையேல் இறைவன் படைத்த இந்த இனிய உலகின் இயற்கைச் செல்வத்தை அவன் தன் சகோதர மனிதர்களுடன் பங்கிட்டு வாழ ஏன் தயங்கவேண்டும்? அளவற்ற பூமியை தனதென்று கோடிட்டு, வேலிகட்டி அதில் தன் சகோதர மனிதனை உழைக்க வைத்து அந்த உழைப்பின் பலனைமட்டும் தானே நுகர ஏன் தாகமெடுத்துத் திரியவேண்டும்? தனிமனிதனின் பேராசைப் பேயுள்ளம்தான் இப்படி தன்னலம் நாடி பிறர்நலம் மறுக்கும் தவறு வழியில் செல்லுகிறதென்றால் அரசாங்க சட்ட திட்டங்களும்—அமைப்புகளும் ஏன் அதற்குத் துணை போகவேண்டும்?

இன்று நாம் காணும் பெரிய வங்கிகளெல்லாம் யாருக்காக உள்ளன? ஏழைகளின் உழைப்பை உறிஞ்சிச்சேர்த்த பணத்தை, பணக்காரர்களுக்கு பத்திரமாகப் பாதுகாத்து அதற்கு வட்டியும் சேர்த்துத் தருவதற்காகத் தானே! காவல்துறையினர் ஏனிருக்கிறார்கள்? பெரும் செல்வந்தர்களின் இந்தக் கொள்ளையடிப்பை சகிக்கமுடியாத வீரஇளம் உள்ளங்கள் வெகுண்டெழுந்து புரட்சி செய்தால்—அவர்களை குண்டாந்தடியால் அடித்து, அல்லது துப்பாக்கியால் சுட்டோ சுரண்டுவோருக்குப் பாதுகாப்புத் தரத்தானே உள்ளன.

நல்லவர்கள் நீதிக்குப் போராடினால் அவர்களுடைய பேச்சுச் சுதந்திரத்தையும், நடமாடும் சுதந்திரத்தையும் பறித்து அவர்களை உலகில் இருந்து தனிமைப்படுத்தி வைக்கத்தானே சிறைகள் உள்ளன. அநீதி வழி செல்லும் கொடுங்கோலரசை மாற்றியமைக்க ஆயிரக்கணக்கில் மக்கள் துணியும்போது அவர்களைக் காக்கைக்குருவிபோல் சுட்டுத் தள்ளுவதற்குத்தானே இராணுவம் உள்ளது.

எனவே, இன்றைய அரசியல்—சமூக—பொருளாதார அமைப்புகள் பெரும்பாலும் இன்றுள்ள அநீதிக்குத் துணைபுரியவே ஏற்பட்டனவேயன்றி நீதியை நிலைநாட்ட அல்லவென்பது கண்கூடாகக் காணும் உண்மைதானே! ஆனால் அதற்காக நாம் சோர்ந்துவிடாமல் நீதிக்காகவும், சுதந்திரத்துக்காகவும் — சகோதரத்துக்காகவும் நாம் தொடங்கிய அஹிம்சை வழி அறப்போரை நடாத்துவோம். இறையருள் துணை நிற்கும்!

## நன்றி

'அறவழி' பத்திரிகை வெளியீடு தொடர்பாக, பணியினை வாழ்த்தி எமக்கு நேரிலும், தபால் மூலமும் —வாழ்த்துச் செய்திகளை வழங்கி எம்மையும் எம்பணியினையும், ஊக்குவித்த பல அறிஞர்கள், பெரியவர்கள். இளைஞர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியறிதலை 'அறவழி' மூலம் தெரியப்படுத்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். (ஆ—ர்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காந்தி மொழிகள்

★ தியாக வாழ்க்கையைத் தெரிந்தெடுத்துக்கொண்டவர்கள், தாங்கள் உயர்வதுடன் மனிதகுலம் முழுவதையும் உயர்த்துகிறார்கள்.

★ சத்தியத்தை நாடுகிறவன் அன்பின் வழிமுறையில் நிற்பவன் நாளைக்கென எதையும் சேமித்து வைக்கமாட்டான்,

★ நம்பிக்கை ஒரு நல்ல பண்பு. பயங்கொள்ளித்தனம்தான் அவநம்பிக்கையைத் தருவது.

★ பிரார்த்தனை காலைத்திறவுகோல், மாலைத்தாழ்ப்பாள்,

★ வருங்காலத்தைப்பற்றி அறிய நான் ஒருபோதும் விரும்புவதில்லை. நிகழ்காலம் மனநிறைவுள்ளதாக இருப்பின் எதிர்காலம் வேறுவிதமாக இருக்கமுடியாது.


★ சுதந்திரத்தோடு இணைந்தது கட்டுப்பாடும் துணிவும்.

★ வேகத்தால் சாதிப்பதொன்றுமில்லை. தனது கடமையை நிதானமாகச் செய்வதால், மனிதன் அதிகமாகத் தெரிந்துகொள்கிறான்; நல்லவிதமாகவும் வாழ்கிறான்.

★ உனக்கு நீயே நீதிபதியாக இரு உண்மையில் நீ மகிழ்ச்சியாக இருப்பாய்.

★ நம்மை அறிமுகப்படுத்துவது நம் வார்த்தைகளல்ல நமது வாழ்க்கையே.

★ மகத்தான தியாகங்கள் இல்லாமல் விடுதலைப் போராட்டங்கள் நடைபெறுவதில்லை.



காந்தியடிகள் கடிதம்:

## கடமையைச் செய் உரிமை உண்டு

''மனிதனின் உரிமைகள்'' என்ற தலைப்பில் பல கட்டுரைகளை எழுதிய திரு. எச். ஜீ. வெல்ஸ் தன் கட்டுரைகளைக் குறித்து மகாத்மாவை அபிப்பிராயம் கேட்டு எழுதியிருந்தார். அதற்கு காந்தியடிகள் எழுதிய பதில் பின்வருமாறு:—

உங்கள் கடிதம் கிடைத்தது. உங்களுடைய ஐந்து கட்டுரைகளையும் கவனமாகப் படித்தேன்.

நீங்கள் தயாரித்ததைவிட இன்னும் மேலான உரிமைச் சாசனத்தை என்னால் தயாரிக்கமுடியும். ஆனால் அதனால் என்ன பயன்? அதன்படி உரிமை கிடைக்கும் என்று உறுதியளிப்பவர்கள் யார்? நான் சரியான வழியைக் கூறுகிறேன்.

''மனிதனின் உரிமை சாசனத்திற்குப் பதில் கடமை சாசனத்தை தயாரியுங்கள். மாரிகாலத்தை

( 9-ம் பக்கம் பார்க்க )

**உலகத்தில் புதிதாக உபதேசிக்க என்னிடம் எதுவும் இல்லை. சத்தியமும் அறவழியும் மலைகளைப் போல மிகப் பழமையானவை- நான் செய்திருப்பதெல்லாம் சத்தியத்தையும் அறவழியையும் ஒட்டிப் பரந்த முறையில் பரிசோதனை செய்ய முயல்வதேயாகும்.**

www.tamilarangam.net



# மாட்டின் லூதர் கிங்

## நீக்ரோ மக்கள்

யார் இந்த நீக்ரோ கறுப்பர்கள்? அவர்கள் எவ்வித சூழ்நிலையில் வாழவேண்டியிருந்தது? இந்த வினுக்களுக்கு விடை தெரியுமா உங்களுக்கு? தெரிந்தால் மட்டுமே நீக்ரோக்களின் இலட்சியங்களுக்கான டாக்டர் மாட்டின் லூதர் கிங் அவர்கள் ஆற்றிய பணியைப் பூரணமாக புரிந்து கொள்ளவும், கணித்துக் கொள்ளவும் முடியும். ''நீக்ரோக்கள் என்ருல் உடலால் உழைப்பதற்கு மட்டுமே பொருத்தமான மிருகங்கள்'' என்று கருதுவோரின் உலகில்தான் மாட்டின் லூதர் கிங் பிறந்தார்.

அமெரிக்காவில் உள்ள அநேக நீக்ரோக்கள் மேற்கு ஆபிரிக்காவில் இருந்து அடிமைகளாக கொண்டுவரப்பட்டவர்களே. நீக்கிரோ மக்கள் அவர்களின் தாயகங்களில் இருந்து வேரறுக்கப்பட்டு பின் மனிதர்களுக்குப் பொருத்தமற்ற சூழ்நிலைகளின்கீழ் மாடாய் உழைக்கத் தள்ளப்பட்டனர். இவ்வடிமைகள் மனிதர்களாக அன்றி எஜமானர்களின் ஆட்டுப்பட்டி, மாட்டுப்பட்டி ஆஸ்திகள்போல் கருதப்பட்டார்கள். இவ்வடிமைகளைச் சொந்தமாக வைத்திருக்கும் எஜமானன் தான் விரும்பிய விதத்தில் இவ்வடிமைகளைப் பயன்படுத்த முடியும். அல்லது அகற்றமுடியும். அவர்களைக்கொல்லவும் முடியும்; விற்கவும் முடியும்.

நீக்ரோ பெண்களும், குழந்தைகளும்கூட பெருந்தோட்டங்களில் வேலை செய்யவேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டனர். சில வேளைகளில் நாளொன்றுக்கு இருபது மணி நேரம் உழைக்கவேண்டியிருந்தது. இக்கொடுமை தாங்காது துன்பம் சகிக்காத பலர் தம்மைத் தாமே தாக்கியும், தமதுடலை தாமே சிதைத்தும் உள்ளனர். சிலர் தற்கொலை செய்து கொண்டு அடிமை வாழ்வில் இருந்து விடுதலை பெற்றனர்.

அடிமைகளின் எஜமானர்கள் அறம், மனிதாபிமான சிந்தனை என்ற கொள்கைகள் யாதும் அற்றோராக இருந்தனர். மேலும், மேலும் அடிமைகளை வேண்டிய எஜமானர்கள் நீக்கிரோக்களிடையே தடையின்றி ''களவு'' நடைபெறுவதை ஊக்குவித்தார்கள். அவ்விதம் செய்து தமது தர்ம உணர்வுகளையும், அறசிந்தனைகளையும் குன்றச் செய்தனர். சில சந்தர்ப்பங்களில் தாய், தந்தை, பிள்ளைகள் யாவரும் பிரிக்கப்பட்டு வெவ்வேறு எஜமானர்களுக்கு விற்கப்பட்டார்கள். தாய் நாட்டிலிருந்து வேரறுக்கப்பட்டு, நண்பர்களைப் பிரிந்து வந்த இவர்கள் மிகவும் மென்மையான குடும்பப் பற்றும் பாசம் என்பவற்றையும் பலியிட வேண்டியதாயிற்று.

எஜமானன் காலால் இடும் கட்டளையைத் தலையால் செய்து முடிப்பதன்றி வேறு கதியற்றோராக இவ்வடிமைகள் இருந்தனர். புரிந்துணர்வும், நம்மைப்

(10ம் பக்கம் பார்க்க)

# அறவழியின் பொருள்

''அறவழி'' என்பது ''மறவழி'' என்பதன் எதிர்ச்சொல்லாகும். மறவழி என்ருல் துன்புறுத்துவது அல்லது உண்மைக்கு புறம்பானது என்று பொருளாம். எனவே துன்புறுத்த மறுக்கும் செயலும் உண்மையும் அறவழியாகும். இந்த உயர்ந்த தத்துவம் எதிர்ச்சொல்லாக அமைந்திருப்பதற்குக் காந்தியடிகளேகாரணம் கூறுகிருர். அவர் கருத்துப்படி தவிர்க்கமுடியாத மறவழியைக் கைவிடும் முயற்சி என்பதே அறவழியின் பொருளாகும்.

கோபம் தன்னலம் ஆகியவற்றின் காரணமாகப் பிறர் உடலையும்—உள்ளத்தையும் புண்படுத்தாமல் இருப்பது அறவழிதான். இது அறவழியில் புற இலக்கணமாகும். உயிர்க்கொலை, கடுஞ்சொற்கள், கூறுவது, தீய எண்ணம், வெறுப்புணர்ச்சி, கொடுமை, மனித உயிர்களையும் விலங்குகளையும் சித்திரவதை செய்தல் எளியோரை வருத்துதல்—சுரண்டல் ஆகியன இல்லாதிருத்தல் அறவழியின் புற இலக்கணமாகும்.

பிறருக்குத் துன்பம் செய்யாமல் இருப்பதோடு அறவழியின் இலக்கணம் நிறைவு பெறுவதில்லை. அதற்கு மேலும் பிறர்படும் துன்பத்திற்கு வருந்தி, பரிவு உள்ளத்தோடு துன்பங்களைய முயலும் முயற்சியில் தன்னையே தியாகம் செய்யத் துணிவது அறவழியில் அக இலக்கணமாகும். வினேபாஜியும் இக்கருத்தினை வலியுறுத்துகிருர். தன்னைச்சார்ந்த மனிதருக்கு மட்டுமன்றி மரங்கள், பூக்கள் விலங்குகள் ஆகியவற்றிடத்தும் அன்பு செலுத்தவேண்டும். சுருங்கச் சொல்வதாயின் நம்மைத் துன்புறுத்துவோரிடமும் அன்பு செலுத்தும் நிலையே அறவழியாகும்.

அறவழியும்—சத்தியமும், காந்தியத்தின் உட்கருவாக அமைந்துள்ளன. அறவழியின் உதவியில்லாமல் சத்தியத்தைத் தேடுவது சாத்தியமன்று, அவை இரண்டும் இரட்டைக் குழந்தைகள். அவற்றை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்றே கொள்ளவேண்டும். அறவழி என்பது ''வழிமுறை'' ஆகும். சத்தியம் 'முடிவு' ஆகும். என காந்திஜீ குறிப்பிட்டுள்ளார். அறவழி மிக உயர்ந்த கடமையாகவும்—சத்தியம் மிக உயர்ந்த சட்டமாகவும் அமைந்திருக்கின்றன.

எல்லா வகையிலும் மறவழியைக் காட்டிலும் அறவழி உயர்ந்ததாக உள்ளது. மறவழியின் முடிவு தோல்வியாகத்தான் உள்ளது ஆனல் அறவழியில் தோல்வி என்பதற்கே இடமில்லை. மறவழி வாழ்வில் உண்மையாகத் தோன்றலாம், ஆனல் அறவழி வாழ்வின் சட்டமாக அமைந்துள்ளது. அறவழி வீரனின் ஆயுதம்—மறவழி கோழையின் ஆயுதம்.

காந்திஜீ அறவழியை ஒரு வாழ்வு முறையாகவும்—தத்துவமாகவும் போற்றினர். அடித்தவனை யோசிக்க வைக்கும் ஆற்றலுடையது அறவழிப் போராட்டம்.

(6ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாழ்க்கையில் முன்னேற்றமடைவதற்குத் தடையாக உள்ள முக்கிய குறைபாடுகளில் தாழ்வு மனப்பான்மை என்பது ஒன்று. சிலர் தங்களைப்பற்றித் தாங்களே மிகவும் தாழ்மையாக எண்ணிக்கொள்வார்கள் — நடந்துகொள்வார்கள்.

வாழ்க்கையில் சங்கடங்கள் குறுக்கிடும்பொது இம்மாதிரியான சங்கடங்கள் எல்லோருக்கும் பொது என்ற உண்மை விளங்காமல், தாங்கள் ஏதோ தகுதி குறைந்தவர்களாக இருப்பதாலேயே அந்த மாதிரித் தொந்தரவுகள் ஏற்படுகின்றன என்று கற்பனை செய்துகொள்வார்கள்.

இந்த உலகத்தில் வாழவே தங்களுக்குத் தகுதியில்லை என்றும், தங்களிடம் எந்தவிதத் திறமையும் கிடையாது என்றும், தங்களால் வாழ்க்கையில் முன்னேறவே முடியாது என்றும் இவர்களாகவே தீர்மானித்துக்கொள்வார்கள்.

இம்மாதிரித் தன்னம்பிக்கை குறைந்த மக்கள் ஏனைய நாடுகளைவிட எமது நாட்டில் மிகவும் அதிகமாக இருக்கின்றார்கள் என்பதை நாம் அன்றாடம் காணக்கூடியதாகவுள்ளது?

தாழ்வு மனப்பான்மை என்பது அறியாமை கலந்த ஒருவிதப் பேதைமை உணர்வேதவிர, அப்படி ஒரு நிலை இருப்பதற்கு நியாயமான காரணங்கள் கிடையாது.

தாழ்வு மனப்பான்மை ஒரு வகையான மன நோய் என்றே கூறவேண்டும்.

சின்னஞ்சிறு வயதிலிருந்தே ஆதரவற்ற நிலையில் வளர்ந்துவரும் குழந்தைகள் பிற்காலத்தில் தாழ்வு மனப்பான்மைக்கு இலக்காக நேரிடும்.

அதட்டி மிரட்டி மிகவும் கண்டிப்பாக வளர்க்கப்பட்ட குலந்தைகளும் பிற்காலத்தில் தாழ்வு மனப்பான்மையினை அடையக்கூடும்.

# தாழ்வு மனப்பான்மை

— ஜீவகன் —

தாழ்வு மனப்பான்மைச்கு இலக்கானவர்களை எளிதாக அடையாளம் கண்டுகொள்ளமுடியும். இத்தகையவர்கள் எப்பொழுதும் தனிமையை விரும்புவார்கள். நிமிர்ந்த உடலும், நேர் பார்வையும் இவர்களிடம் அமைந்திருக்காது. பிறரிடம் தாராளமாக உரையாட இவர்கள் கூசுவார்கள் அல்லது தயக்கம் கொண்டிருப்பார்கள். பிறரிடம் உரையாடும்போது இவர்கள் தலைகுனிந்து, சங்கோஜத்தால் உடலைப் பல கோணங்களாக வளைத்து மிகுந்த தயக்கத்துடன் உரையாடுவாச்கள்.

தப்பித்தவறி இவர்கள் யாரிடமாவது மனம் விட்டுப் பேசத்தொடங்கினுல் இவர்களுடைய பேச்சின் பெரும்பகுதி தங்களுடைய சொந்த வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்கள், துன்பம் துயரங்கள் குறித்து அழுகையாகவே இருக்குப்.

உலகில் மற்ற மக்கள் அனைவருமே மிகவும் சுகமாகவும், இன்பமாகவும், திருப்தியாகவும் வாழ்வது போலவும் இவர்கள்மட்டும் பெருங்கஷ்டத்தையும், துயரத்தையும் அனுபவிப்பதாகவும் மனக்குறைபட்டுக் கொள்வார்கள்.

தாழ்வு மனப்பான்மை எனும் நோயினுல் பீடிக்கப்பட்டவர்கள் எந்தச் செயலைச் செய்ய முற்பட்டாலும், தயக்கமில்லாமல் அந்தச் செயலில் இறங்கிவிடமாட்டார்கள். தங்கள் செயற்பாட்டில் என்ன குறை இருக்குமோ, மற்றவர்கள் அதை விளங்கிக் கொண்டு குற்றம் குறை சொல்வார்களோ, தங்களை அவமானப்படுத்துவார்களோ என்றெல்லாம் அஞ்சி, அஞ்சி மனம் குழம்புவார்கள்.

சிறுவயதில் இருந்தே வறுமைச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட குழந்தைகளும் பிற்காலத்தில் இந்த நிலைக்கு இலக்காக நேரிடும்.

தகுந்த கல்வி வசதியின்மை, தாராளமாகப் பிறருடன் கலந்து பழகும் வாய்ப்புக் குறைவாக இருக்கும் நிலை, காரணமற்ற கற்பனை மனப்பான்மை போன்றவையும் தாழ்வு மனப்பான்மைக்கு மக்களை இலக்காக்கிவிடும்.

மனித வாழ்வில் தொடர்ந்து ஏற்படக்கூடிய தோல்விகளும்—ஏமாற்றங்களும் தாழ்வு மனப்பான்மையைத் தோற்றுவித்து விடுவது உண்டு.

தாழ்வு மனப்பான்மை என்பது ஒரு நோய். நோய் என்றுலே அது தீர்க்கப்படக்கூடிய ஒன்றுதானே. அதுபோலவே, தாழ்வு மனப்பான்மைக் குறைபாடும் அகற்றிக்கொள்ளக்கூடிய ஒன்றுதான்.

மற்ற மக்களிடம் இல்லாத மோசமான பல குறைபாடுகள் தங்களிடம் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்வதுதான் தாழ்வு மனப்பான்மையினரின் பொதுவான இயல்பாக இருக்கிறது.

உலகத்தில் எந்த நாட்டில் வாழ்க்கை நடத்தும் மக்களாக இருந்தாலும், ஒரு குறைபாடும் இல்லாத மனிதர் என்று ஒருவரைக்கூடக் காணமுடியாது.

மிகச்சிறந்த திறமைசாலிகள் என்று மதிக்கப்படுவோரிடமும் ஒரு சில குறைபாடுகளாவது இருக்கத்தான் செய்யும். திறமையும், திறமையின்மையும்

( 6ம் பக்கம் பார்க்க )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்றைய கல்வி முறையும் — வாழ்க்கையும்

சின்னஞ்சிறு வயதில் இருந்தே கல்விப் பயிற்சியினைத் தொடங்கவேண்டியிருக்கிறது. கல்விக்கென அமைந்திருக்கும் வசதிகளைத் தானே குழந்தைகள் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

பாடசாலைக்குச் செல்லுகிறார்கள். பாடசாலையில் ஒரேமாதிரியான கல்வி அவர்களுக்குப் போதிக்கப்படுகின்றது,

வேறு என்ன செய்ய முடியும்? அந்தக் கல்வியைத்தானே குழந்தைகள் கற்றுக் கொள்ளவேண்டியிருக்கிறது.

பாடசாலைக் கல்வியினை முடித்துக் கொண்டு உயர்கல்லூரிகளுக்குச் சென்றாலும் அங்கும் இதே நிலைதான்.

ஆக, மாணவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஒரேமாதிரியான கல்வி முறை அவர்கள்மீது திணிக்கப்படுகின்றது.

ஆகவே, அச்சுவார்த்தது போன்று ஒரே மாதிரிக் கல்வியினை அவர்கள் பெறுவது தவிர்க்க முடியாததாகவுள்ளது.

அந்த மாதிரிக் கல்வி முறை தேவையில்லையென்று எந்தப் பெற்றோரோ அல்லது குழந்தைகளோ கருதினால் அவர்கள் கல்விப் பயிற்சியே பெறாமல் வீட்டில் இருக்கவேண்டியதுதான்.

ஏனென்றால், வேறுபட்ட கல்விப் பயிற்சிக்கு இங்கு வழியோ திட்டமோ இல்லை!

ஆகவே, படித்துவிட்டு பாடசாலைகள் கல்லூரிகளில் இருந்து வெளிவரும் குழந்தைகளை—இளைஞர்களைமட்டும் குறை சொல்லிப் பயனில்லை.

எனவே, இன்று அளிக்கப்படும் கல்வி முறை அடியோடு மாற்றப்பட்டு வாழ்க்கைக்குப் பயன்படும் விதத்தில் புதிய புரட்சிகரமான கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

# அகதிகள் ஆதரவு முகாம்

திருகோணமலை, கிளிநொச்சிப் பகுதிகளில் இடம்பெற்ற அட்டூழியங்கள் காரணமாக அங்கிருந்து இடம் பெயர்ந்து எம் பிரதேசங்களுக்குப் புகலிடமும், பாதுகாப்பும் தேடி வருகின்ற மக்களுக்கு உதவும்பொருட்டு, அறவழிப்போராட்டக்குழு இம்மாதம் 1ம் திகதி முதல், கைதடி வெளிக்கள நிலையத்தில் ஓர் அகதிகள் ஆதரவு முகாமை நடத்தி வருகின்றது.

இம் முகாமில் தற்போது 180க்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு உணவளித்துப் பராமரிக்கின்ற பாரிய பணிக்கு சாவகச்சேரிப்பகுதியில் இருக்கின்ற பல பொது ஸ்தாபனங்களும், கிராமங்களும் எம்முடன் இணைந்து உதவிவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசின் பங்கீட்டு உணவுப்பொருட்கள் இவர்களுக்கு இல்லாதபோதிலும், இவர்களது பசியைப் போக்கவேண்டியது எம் பாரிய பொறுப்பாகும்.

எமது அகதிகள் ஆதரவு முகாம் பணிக்கு தங்களின் உதவியும் ஒத்துழைப்பும் கோரப்படுகின்றது.

### தாழ்வு மனப்பான்மை

( 4ம் பக்கத் தொடர்ச்சி )

சுதந்த ஒரு கலவையாகத்தான் மனிதன் இருக்கின்றான் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

தான் மிகுந்த குறைபாடு உள்ளவன் என்று தனக்குத்தானே கருதித் தாழ்வு மனப்பான்மை கொண்டுள்ள ஒருவர் அந்தக் குறைபாட்டை அறவே மறந்துவிட்டுத் தங்களிடம் மறைவாக அமைந்திருக்கும் திறமை என்னவென்று கண்டு அறிந்து—அந்தத் திறமையைத் திட்டமிட்டு வளர்த்துக்கொள்ளவேண்டும்.

திறமையைத் தக்கபடி வளர்த்துக்கொண்டோம் என்றால் நம்மிடம் உள்ள குறை வலுவிழந்து இருக்குமிடம் தெரியாமல் போய்விடும்.

திறமையை வளர்த்து ஆக்க பூர்வமான முயற்சிகளில் திவிரமாகத் தொடர்ந்து ஈடுபட்டால் தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதற்கு வழியோ, வாய்ப்போ அமையாமல் போய்விடும்.

வாழ்க்கையில் முன்னேறவேண்டும் என்று துடிப்பவர்களைப் பாதிக்கும் இக்கொடிய நோயை அவர்கள் அகற்றிக்கொள்ளவேண்டும்.

### அறவழியின் பொருள்……

( 4ம் பக்கத் தொடர்ச்சி )

ஆத்திரப்பட்டு அடிக்கிறானே அவன். அது மிகவும் தப்பான காரியம் என்பதை எடுத்து உணர்த்துவது அறவழிப் போராட்டம்.

தான் ஆத்திரத்தால் செய்துவிட்ட குற்றத்தை எண்ணிப்பார்த்து—அதற்காக வருந்தி, அதற்கு பிராயச்சித்தமாக மன்னிப்பு கேட்க வைத்து, அவனை மனிதனாக மாற்றும் சக்தி படைத்தது அறவழிப் போராட்டம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழத்துத் தேசிய பானம்

வீ. ஜீ. தங்கவேல்.

சுதந்திரக்காற்றினைச் சுகமாகச்சுவாசிக்கும் எந்தவொரு நாடும் தமதுநாட்டின் இயற்கைச் செல்வங்களைக் கௌரவித்துப் போற்றும் வகையில் தேசிய அந்தஸ்தினை வழங்கிப் பெருமைப்படுத்துவார்கள். இந்த வகையில் தமிழகத்தில் தேசிய மரமாக கற்பகதருவாம் கரும்பனையினை தமிழக அரசு தெரிந்தெடுத்து அறிவித்துள்ளது. இந்நடவடிக்கையினை தமிழக அரசு மேற்கொண்டதனால் தமிழக அரசு பெருமைபெற்றதா அல்லது கரும்பனை பெருமை பெற்றதா என்பது கற்பகதருவின் வரையாது வழங்கும் கொடைத்திறனை ஆராய்ச்சி செய்பவர்களினால்தான் அறுதியிட்டுக் கூறமுடியும்.

உடையினைத் தவிர மனிதனுக்கு தேவையான சகல உபகரிப்புக்களையும் வழங்குகின்ற கற்பகதரு கோடை காலத்தில் தன்னை அண்டி வாழுகின்ற மனிதர்களின் தாகத்தினைப் போக்கும் வகையில் வரையாது கொடுக்கின்ற பானம் பதநீராகும். பதனீர் உயிரச்சத்துக்களும் ஊட்டச்சத்துக்களும் நிரம்பிய ஓர் உயரிய சைவ சுத்தபானம் ஆகும். தமிழர்கள் வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ள காலத்தின் இயற்கொடையான பதனீரைப் பண்டைத் தமிழர்கள் அமிர்தம், புதுமது, தெள்ளமுது, காமதேனு, பசுநரு என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்துள்ளதனைப் பண்டை ஏடுகள் வாயிலாக அறியக் கிடக்கின்றது. இந்த வகையில்

''கற்பக தருவைச் சார்ந்த
காகமும் அமிர்தமுண்ணும்''

எனும் பழம் பாடலில் பதநீரை அமிர்தம் எனக் குறிப்பிடுவதன் மூலம் மரணத்தை வெல்லுகின்ற சக்தி பதநீருக்கு உண்டு என்பதைக் கவிஞர்கள் கூறுகின்றார்கள்.

பழம் சிறப்பும் பாமரர்களுக்கு உதவும் பண்பும் மிக்க பதநீரை ஈழத்தின் தேசிய பானமாக ஏற்றுக் கொள்வர் பயன் தெரிந்தோர்.

கற்பகதரு, ஈழத்தில் தமிழன் எங்கெங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்தானோ அங்கெல்லாம் பனையின் பரம்பலும் பரவி உள்ளது என்பதை ஆய்வு அறிக்கைகள் மூலம் அறிந்து கொள்ளலாம். தாலமும் தமிழனும் பிரிக்க முடியாதவர்கள் என்பதையும் தாலத்தைப் போல் தமிழர்களும் கடமையில் சிறந்தவர்கள் என்றும் பனைக்கும் தமிழனுக்கும் தலைவணங்காத் தன்மையில் ஓர் ஒற்றுமையுண்டு என்னும் பல அறிஞர்களாலும் போற்றப்படும் வகையில் பனை மரத்தின் அருங்கொடையாம் பதநீர் எல்லோருக்கும் எளிதிற் கிடைக்கக் கூடியதாகும். இதனைச் சுகாதார முறைப்படி பாதுகாத்துப் பயன்பெறுவது சிறப்பான தாகும்.

பருவகாலங்களில் தோன்றும் தபூந்துணர்களைப் (பாளை)பதப்படுத்திச் சீவி வடிப்பதன்மூலம் பெறப்படும் இனிப்புச் சுவையுடைய சுவைநீரினைப் பதனீர் என அழைப்பர். முற்காலங்களில் அரசர்கள் இப்பானத்தினை உயர்ந்த பானமாகக் கருதி அருந்தியபடியால் ''பதிநீர்'' என்றும் (பதி—அரசன்) பாளைகளைப் பதப்படுத்திச் சீவி வடிப்பதன்மூலம் பெறப்படுவதால் பதனீர் என்றும் அழைக்கப்படுகின்றது. (தொடரும்)

## வாசகர்களே!

''அறவழி'' பத்திரிகையின் மூன்றாவது இதழ் தங்கள் கரங்களில் தவழ்கின்றது. நாம் எதிர்பார்த்ததற்கு மேலாக, வாசகர்கள் இப்பத்திரிகைக்குக் கொடுத்து வருகின்ற விசுவாசமிக்க ஆதரவு—எமக்கு மேலும் உற்சாகமும், வலுவும் ஏற்படுத்துவதாக அமைகின்றது.

இப்பத்திரிகையின் வளர்ச்சிபற்றியும், பிரசுரிக்கப்படுகின்ற விடயதானங்கள்பற்றியும், தயவு செய்து எமக்கு எழுதுங்கள். வாசகர்களின ஆக்கவழிப்பட்ட விமர்சனங்களை வரவேற்கிறோம்.

அறவழி, தமிழ்சமுதாயத்தில் நல்வழியைக் காட்டி நற்பணியாற்றவேண்டும் என்பது எமது திட்டம். இத்திட்டம் நல்ல வகையில் தொடர்ந்தும் நிறைவேறத் தங்களின் முழுமையான, விசுவாசமிக்க ஒத்துழைப்பையும், ஆதரவையும் எதிர்பார்க்கிறோம்.

எமது சிறிய பணி எதிர்காலத்தில் பல்கிப் பெருக, தங்களின் ஆசியும், இறைவனின் பிரார்த்தனையும் துணை நின்று வழிகாட்டும் என நம்புகின்றோம்.

அறவழி
—ஆசிரியர் குழு.

## கண்ணியம், கட்டுப்பாடு

மக்கள் தமது சுதந்திரத்தை அனுபவிக்கவேண்டுமாயின் முதலில் தாமாகவே கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பவற்றைக் கடைப்பிடிக்கும் இரகசியத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

இல்லையேல் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் அதிகாரத்தால் அவர்மேல் திணிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அது சுதந்திரம் ஆகாது. சுதந்திரத்தை மறுப்பதற்கும் ஒப்பானது ஆகும்.

ஒவ்வொரு நாட்டு மக்களும் தாம் எப்படியான அரசாங்க ஆட்சிக்குத் தகுதியானவர்களோ அவ்விதமான அரசாங்கத்தைப் பெறுகிறார்கள், மக்கள் காடைத்தனத்தில் ஈடுபட்டால் அரசாங்கமும்—சட்டம்—ஒழுங்கு என்ற சாட்டில் காடைத்தனத்தில் ஈடுபடும். விளைவு சுதந்திரம் அல்ல

அரசும்—மக்களும் ஒன்று மற்றொன்றைக் கட்டுப்படுத்தும் இரண்டு சமமான புரட்சிக்குழுக்களாக மாறும்.

ஒருமித்த சுதந்திரத்திற்கு சுயமான கட்டுப்பாடே முதலில் அவசியமானது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சத்தியத்தைத்தேடும் பாதையில்.....

சத்தியமும் அறவழியுமே எனது தெய்வம். அறவழியை நான் தேடும்போது சத்தியம் என்னிடம் வந்து தனக்கூடாக அறவழியைக் காணச் சொல்லும் சத்தியத்தை நான் தேடும்போது அறவழி என்னிடம் தனக்கூடாக சத்தியத்தைக் காண் என்று கூறும்.

நான் உலகிற்கு புதிதாகக்கூற எதுவுமில்லை. அறவழியும் சத்தியமும் உலகம் எவ்வளவு பழமை வாய்ந்ததோ அத்தனை பழைமைவாய்ந்தன. நான் இப்போது செய்திருப்பதெல்லாம் என்னவெனில் அறவழி, சத்தியம் இரண்டிலும் பெருமளவிலான பரிசோதனைகளை என்னல் மட்டும் முயன்று பார்த்திருப்பது தான். இப்பரிசோதனைகளின்போது சில சந்தர்ப்பங்களில் நான் தவறுகள் இழைத்துள்ளேன். அந்தத் தவறுகளில் இருந்தே பாடம் கற்றுள்ளேன் வாழ்வும், அதன் பிரச்சனைகளையும், அறவழியையும், சத்தியத்தையும் நான் கடைப்பிடிக்கும் சோதனைக்களங்களாக அமைந்துவிட்டன.

எனது உள்ளுணர்வின்படி நான் சத்தியவானக இருக்கிறேன். ஆனல் அறவழியில் நிற்கவில்லை. ஒரு தடவை ஒரு முனிவர் சரியாகக் கூறினர் நான் சத்தியத்தை முதலாவதாகவும், அறவழியை இரண்டாவதாகவும் கருதுகிறேன். அவர் கூறியது போலவே—நான் சத்தியத்தை நிலை நாட்ட அறவழியைத் தியாகம் செய்யக்கூடியவனுக இருக்கிறேன். உண்மையாகவே சத்தியத்தைத் தேடிச் செல்லும் எனது பயணத்தின்போது அறவழி என்ற ஒன்றை நான் கண்டுகொண்டேன்.

தொடர்ச்சியாக ஐம்பது வருட காலம் அறவழியையும் அதனுல் ஆகக்கூடியவற்றையும் விஞ்ஞான ரீதியான பூரணத்துவத்துடன் நான் கடைப்பிடித்து வருகிறேன். எனது வாழ்வின் குடும்பப் பிரச்சனை, ஸ்தாபன, பொருளாதார, அரசியல் ரீதியான சகல பிரச்சனைகளிலும் அறவழியை நான் பிரயோகித்து வந்துள்ளேன். எனக்குத் தெரிந்தவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் அறவழி எனக்குத் தோல்வியைத் தரவில்லை. அது தோல்வியைத் தந்ததுபோல் தோன்றிய சில சந்தர்ப்பங்கள் உண்டு. அவற்றிற்கு, உண்மையில் அறவழியன்றி எனது பூரணத்துவம் இன்மையே காரணமென்பேன்.

நான் பூரணத்துவமானவன், குற்றமற்றவன் என்று நான் எப்பொழுதும் கூறவில்லை. ஆனல் நான் மிகவும் ஆவலுடன் சத்தியத்தைத் தேடி அலையும் ஒருவன் என்பதையும் வலியுறுத்துகிறேன். ஏனெனில் ''இறைவன்'' என்பதற்கு மறுபெயர் ''சத்தியம்'' என்பதாகும்,

சத்தியத்தைத்தேடிச் செல்லும் எனது பாதையில் ''அறவழி''யை நான் கண்டுபிடித்தேன். அறவழியை உலகம் முழுவதும் கடைப்பிடிக்கும்படி பரவச் செய்தலே எனது வாழ்க்கைப் பயணத்தின் நோக்கமாகும். எனது அறவழி என்னும் நோக்கத்திற்காகவன்றி வேறெதற்காகவும் வாழ்வதில் எனக்கு இஷ்டம் இல்லை. —காந்தி

## சமாதானம் ஒரு கனவல்ல

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது அழியா வாக்கு. ஒற்றுமைக்கு வழி சமாதானம். இச்சமாதானத்தை இன்று வலியுறுத்துகிறோம். இந்தச் சமாதானம் ஒரு கனவல்ல. அது செயலில் இடம் பெற வேண்டும்.

மக்கள் மனங்களிலே, நாட்டு மனங்களிலே, உலக மனங்களிலே வேரூன்றி வளரவேண்டும்.

சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்களெனப்படுவர்'' என்று கிறீஸ்து குன்றின்மேல் நிகழ்த்திய பொன்னுரையில் பொருள் பொதித்து மலைப்பொழிவாகப் பொழிந்தவர்.

''சமாதானம் பேசுவோர் பலவீனமுடையோர் அல்ல. மாறுக அவர்கள் அறிவுடையோர், உறுதி உடையோர், மக்கள் நலன் விரும்பியோர், மனித வளர்ச்சியை விரும்பியோர், தெய்வீக சாயலுடையோர். அதனுலேதான் அவர்கள் கடவுளின் மக்களாகின்றனர்.

நாமெல்லோரும் சமாதானம் செய்வோராக மாறவேண்டும்.

''சமூகத்தின் வாழ்க்கை முறையை நிர்ணயிக்கும் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், சிந்தனையாளர்கள், வெளியீட்டாளர்கள். ஓவியர்கள், மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குவோர், ஆசிரியர்கள், மறையாசிரியர்கள், போர்க்கருவிகளைச் சந்தைப் படுத்தத் திட்டமிடுவோர், இயக்குவோர் அனைவரும் தாராள மனங்கொண்ட நேர்மையுடன் சிந்திக்க வேண்டும். சமாதானத்துக்கு வழி தேடவேண்டும்.''

போர்க்களத்தில் அல்ல சமாதானப் பேச்சு. எங்கெங்கு மனித வாழ்வு உண்டோ அங்கெல்லாம் சமாதானம் நிலவவேண்டும்.

## விடா முயற்சி

இன்னெருவன் தனது ஆற்றலால் ஒரே தடவையில் வெற்றியடைந்தாலும், நீ நூறு தடவை முயல்க.

இன்னெருவன் பத்துமுறை முயன்று வெற்றியடைவானுயின் நீ ஆயிரம் தடவை முயல்க!

ஒரு மனிதன் இவ்விதமாக முயல்வானுயின் அவன் அறிவு குறைந்தோனுயினும் நாளடைவில் நிச்சயமாக அறிவாற்றலுள்ளவனுவான்!

அவன் பலவீனனுயினும் நாளடைவில் நிச்சயமாக பலமுள்ளவனுவான்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதிய சமுதாய வெளியீட்டகம் (NSP)

பிலடெல்பியாவினைத் தலைமைப் பணியகமாகக் கொண்டியங்கும் "புதிய சமுதாய மாற்ற இயக்கத்தின் (Movement For-a New Society—MNS) மற்றொரு வேலைத்திட்டமாக" புதிய சமுதாய வெளியீட்டகம் (New Society Publishers-NSP) ஒன்று உருவாக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது.

இவ்வெளியீட்டகம் மூலம் அறவழி சார்ந்த பல புதிய நூல்கள் பிரசுரிக்கப்பட்டு, சர்வதேச நாடுகளில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

அமெரிக்காவிலே, அறவழி சார்ந்த நூல்களையும், பிரசுரங்களையும் பெருமளவில் வெளியிடுகின்ற வெளியீட்டகமாக புதிய சமுதாய வெளியீட்டகம் திகழ்ந்து வருகின்றது. கடந்த வருடம் மேற்கு ஜெர்மனியில் இடம்பெற்ற சர்வதேசப்புத்தகக் கண்காட்சியின்போது, புதிய சமுதாய வெளியீட்டகத்தினால் பிரசுரிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான நூல்கள் விற்பனையாகின.

இவ்வெளியீட்டகத்தின் முக்கிய பணிகளில் ஈடுபட்டுழைத்துவருகின்ற டேவிட் எச் அல்பேட் (David H. Albert) எலன் சுவாசிலக் (Ellen Suwasilak) என்பவர்கள் 1980ம் ஆண்டு காலப்பகுதியில் அறவழிப் போராட்டக் குழுவின் விருந்தினர்களாக இங்கு தங்கியவர்களாவர்,

டேவிட் எச். அல்பேட் என்பவர், அக்காலப் பகுதியில் குழு ஏற்பாடு செய்த வீணைக்கச்சேரியை நடாத்தி யாழ் மக்கள் மத்தியில் மதிப்புப்பெற்றவர்.

எமது ஸ்தாபனத்தின் நிர்வாக இயக்குனர் திரு. க. ஜீவகதாஸ், இவ்வெளியீட்டகத்தில் சில மாதகாலம் புத்தக வெளியீட்டுத்துறையில் பயிற்சிபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காந்தியின், கொள்கைகளை நடைமுறையில் செயல்படுத்தி வரும் புதிய சமுதாய மாற்ற இயக்கத்தின் (MNS) சாதனைமிக்க செயல் திட்டங்களுள் புதிய சமுதாய வெளியீட்டகமும் ஒன்று எனலாம்.

## கலாசாரப் போட்டிகள்

அறவழி பாலர் கழகங்களில் கல்வி கற்கின்ற மாணவர்கள மத்தியில் கலை ஆர்வத்தினை ஊக்கப்படுத்தும் பொருட்டு நடாத்தப்பட்ட கலாச்சாரப் போட்டிகளில் பின்வரும் பாடசாலைகள் முதல் ஐந்து இடங்களையும் பெற்றுக்கொண்டன.

1. யாக்கரு
2. நுணாவில் மேற்கு
3. சமரபாகு —ஏ
4. சிங்கை நகர்
5. சமரபாகு—பி.

இறுதிப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பரிசில்களை யாழ் பல்கலைக்கழக—கைலாசபதி அரங்கில் நடைபெற்ற விழாவில், "அறநெறிக்காவலர்" பேராசிரியர் கு. நேசையா வழங்கினார்.

## பாத யாத்திரை

நாட்டின் இன்றைய சூழ்நிலையில் மக்கள் அமைதியும், ஆனந்தத்தையும் ஏற்படுத்த உதவும் நோக்குடன் சைவப்பெரியார். ஆத்மஜோதி நா. முத்தைா தலைமையில், பல அபிமானிகள், தென்மராட்சிப் பகுதியில் இருக்கின்ற ஐம்பதுக்கு மேற்பட்ட திருத்தலங்களுக்கு பாத யாத்திரை மேற்கொண்டனர்,

இவ்யாத்திரைக் காலங்களில், ஆத்மஜோதி நா. முத்தையா, பல சொற்பொழிவுகளை நிகழ்த்தி மக்கள் மனதில், புதிய உணர்வுகளையும், செயலூக்கத்தினையும் ஏற்படுத்தியுள்ளார்.

## பிள்ளைகளை ஊக்குவிப்போம்

பிள்ளைகளுக்குத் தாங்கள் சிறந்தவர்கள் என்பதை மற்றப் பிள்ளைகளிடம் காட்டிக்கொள்ளவேண்டும் என்ற துடிப்பு ஏற்படும், இந்தத் துடிப்பினால் அவர்கள் சித்திரம் வரைந்து காட்டுவார்கள் வேகமாகப் படித்துக்காட்டுவார்கள். பாட்டுப்பாடிக் காட்டுவார்கள். இவைகளை எல்லாம் சேட்டைகள் என்று எண்ணி நாம் பிள்ளைகளை அதட்டக்கூடாது. பிள்ளைகளுக்கு எதில் ஊக்கம் இருக்கிறது என்பதைப் பார்த்து அவைகளைப் பெற்றோர்களாகிய நாம் பாராட்டவேண்டும். பிள்ளைகளை ஊக்குவிக்கவேண்டும். புத்தகங்களை வாங்கிக் கொடுக்கவேண்டும். சித்திரம் வரையும் பிள்ளைகளுக்கு பெயின்ட் பிரஷ் வாங்கிக் கொடுக்கவேண்டும். பிள்ளைகளுக்கு எதில் ஆர்வம் இருக்கின்றதோ, அதை அதிகப்படுத்தினால் அவர்கள் அந்தக் கலையில் சிறந்து விளங்குவார்கள்.

தொகுப்பு; — க. கனகராசா.

## கடமையைச் செய் ....

3ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து வசந்த காலம் வருவதுபோல கடமையைத் தொடர்ந்து உரிமையும்தானே வரும்".

நான் என் அனுபவத்திலிருந்து இதை எழுதுகிறேன். வாலிப காலத்தில் என் உரிமையை வற்புறுதிப்பெற முயன்றேன். ஆனால் வெகு சீக்கிரத்திலேயே எனக்கு எவ்வித உரிமையுமில்லை என்பதை உணர்ந்தேன். என் மனைவிமீதுகூட எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பது தெரிய வந்தது.

பின்னர் என் மனைவி, மக்கள், நண்பர், சுற்றத்தார். சமூகத்தினர் இவர்களுக்கு நான் செய்யவேண்டிய கடமையினை செய்து வர ஆரம்பித்தேன். இப்போது எல்லா மனிதர்களையும்விட நான் அதிக உரிமைகளை பெற்றிருக்கின்றேன்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அறவழி
NONVIOLENCE

# கிராமிய நூலக வளர்ச்சிக்கு உதவுங்கள்!

கிராமிய மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தினை உருவாக்கும் பொருட்டு அறவழிப்போராட்டக் குழு பின் தங்கிய கிராமங்களில் நூலகங்களை அமைக்கும் திட்டத்தினை மிக விரைவில் நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தும் நோக்குடன் தமிழ் மக்கள் மத்தியில் நூல்கள், சஞ்சிகைகள் சேகரிக்கும் திட்டத்தினை முதற் படியாக ஆரம்பித்துள்ளது.

எனவே, கிராமிய வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்களும், புத்தக வெளியீட்டாளர்களும், கல்விமான்கள், ஆசிரியர்கள், இளைஞர்கள், மாணவர்கள் தம்மால் இயன்ற நூல்கள், சஞ்சிகைகளைச் சேகரித்து எமக்கு வழங்க அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கிராமிய மக்களின் வாசிப்புப் பழக்கம் அபிவிருத்தி அடைகின்றபோது, அவர்களின் அறியாமை நீங்கி விழிப்புணர்வும், தெளிவு நிலையும் வளர்ச்சியடையமுடியும் எனக் குழு எதிர்பார்க்கின்றது.

எனவே, இப்பணிக்கு தங்களின் ஆதரவை எமக்கு வழங்குமாறும், இப்பணியில் பங்காளர்களாக இணைந்துகொள்ள விரும்புவோர், தமது அன்பளிப்புக்களை, குழுப்பணிமனையில் சேர்ப்பித்துக்கொள்ளுமாறும் வேண்டுகிறோம்.

# கட்டுரை சித்திரப் போட்டி

சர்வதேச சமாதான ஆண்டினை முன்னிட்டு அறவழி பத்திரிகை பாடசாலை மாணவர்கள் மத்தியில் கட்டுரைப்போட்டி, சித்திரம் வரைதல் போட்டி என்பவற்றினை நடாத்தவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் பாடசாலை மாணவர்கள் தமது ஆக்கங்களை சமாதானம், பங்கேற்தல், அபிவிருத்தி என்பவற்றினை மையப் பொருளாகக் கொண்டு படைத்தல் அவசியமாகும்.

கட்டுரைப் போட்டியில் பங்கு கொள்ளும் பாடசாலை மாணவர்கள், தமது கட்டுரைகளை 1000 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுதல் வேண்டும்.

சித்திரம் வரைதல் போட்டியில் பங்கு கொள்பவர்கள் தமது சித்திரங்களை "12×10" அளவிலான பிறிஸ்டல் போட்டில் வரைந்து அனுப்புதல் வேண்டும்.

போட்டிகளில் பங்கு கொள்ளும் மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் சிபார்சுடன் தமது ஆக்கங்களை அனுப்புதல் அவசியமானதாகும்.

போட்டிகளில் சிறந்தவையாகத் தெரிவு செய்யப் படுபவைக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப் படும்.

போட்டிகளுக்களுக்கான முடிவு திகதி 1[illegible]—9—86 ஆகும்.

அறவழி
அஞ்சல் பெட்டி இல. 2.
சாவகச்சேரி.

## மாட்டின் லூதர் கிங்..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

போல் இவர்களும் மனிதர்கள் தானே என்ற உணர்வும் இவர்கள் என்றும் காணவில்லை. சகல மனித உணர்வுகளும் இவர்களுக்கு மறுக்கப்பட்டன.

வெள்ளையர்கள் கறுப்பர்களை இழிந்தவர் என்றே கருதினர். எல்லாவிதத்திலும் பாகுபாடு நிலவியது சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சார, அறிவியல் துறைகளில் நீக்கிரோக்களின் முன்னேற்றம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய விதத்தில் தடை செய்யப்பட்டது. வெள்ளையர்கள் செலுத்தும் அதேயளவு வரிகளை கறுப்பர்களும் செலுத்துகிறார்கள். ஆயினும் கறுப்பின நீக்ரோக்கள் முடியுமான சகலவிதத்திலும் மோசமான பாகுபாட்டுடன் நடாத்தப்பட்டார்கள்.

நீக்ரோக்களுக்கு மிகவும் தரம் குறைந்த பாடசாலைகளும் கல்வியும் வழங்கப்பட்டன. 1942ல் மிஸிஸிப்பி மாநிலத்தில் கல்விக்காக வழங்கப்பட்ட தொகையின் 9% மட்டுமே நீக்கிரோக்களுக்காக ஒதுக்கப்பட்டது.

உயர்கல்வி நீக்ரோக்களுக்குக் கிட்டவில்லை. தென் மாநிலங்களில் நீக்கிரோக்கள் பல்கலைக்கழகத் தேர்வு வகுப்புகளுக்குப் பின் கற்கமுடியாதிருந்தது. நீக்கிரோ மாணவர்கள் வீடுகளில் கற்பதற்குப் பாடப்புத்தகங்களும் வழங்கப்படுவதில்லை.

( வளரும் )

இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினால். யாழ். புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1986 ஆடி 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்